ධීවර අමාත්‍යාංශය

கடற்றொழில் அமைச்சு

Ministry of Fisheries

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2017

ලංකා ධීවර සංස්ථාව

Ceylon Fisheries Corporation

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

உள்ளடக்கம் பக்கம்

- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தாபிதமும் சட்டக் கட்டமைப்பும் 01-02
- கூட்டிணைப்புத் தகவல்கள் 03-04
- நோக்கும் அரும்பணியும் 05
- கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சருக்கு கையளிக்கப்படுகின்ற கடிதம் 06
- தலைவரின் மீளாய்வு 07-08
- பணிப்பாளர் சபையின் அறிக்கை 09-12
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 13-23
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பான பதில்க் கடிதம் 24-30
- நிதிநிலைமை பற்றிய கூற்று 31
- விரிவான வருமானம் பற்றிய கூற்று 32
- காசுப் பாய்வுக் கூற்று 33
- உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று 34
- கணக்குக் குறிப்புகள் 35
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய பொழிப்பு 36-44
- விகிதாசார பகுப்பாய்வு 45
- ஊழியர் விபர அறிக்கை 46

<u>இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தாபிதமும் சட்டக் கட்டமைப்பும்</u>

1957 இன் 49 ஆம் இலக்கமுடைய கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் 1964 ஆம் ஆண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதோடு தொழில்முயற்சிப் பணிகள் 1965 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தருணத்தில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களால் ஒட்டுமொத்த கடற்றொழில் துறையுமே உள்ளடக்கப்பட்டிருந்தது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் 1964.10.01 ஆந் திகதிய 14186 ஆம் இலக்கமுடைய இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

i. கூட்டுத்தாபனம் மூலமாக நேரடியாகவும் அதிகாரம்பெற்ற முகவர்கள் மூலமாகவும் ஆழ்கடலில் ரோலர் கலங்கள் ஊடாக மீன் பிடித்தல்.

ii. கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக அல்லது அதிகாரம்பெற்ற முகவர்கள் மூலமாக மீன்களை பதப்படுத்துதல், தகரத்திலடைத்தல், உலர்த்துதல் மற்றும் தயாரித்தல் மீன் துணை .உற்பத்தி நடவடிக்கைகள் .

iii. கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக அல்லது அதிகாரம்பெற்ற முகவர்கள் மூலமாக மீன்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் சந்தைப்படுத்துதலும் பகிர்ந்தளித்தலும்.

iv. குளிரூட்டல் நிலையங்களை உள்ளிட்ட மீன்பிடித் துறைமுகங்களையும் நங்கூரத்தலங்களையும் நிர்மாணித்தலும் பராமரித்தலும்.

v. மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும்.

vi. மீன்பிடிக் கைத்தொழிலுக்கான கருவிகள், உபகரணங்கள் மற்றும் அவசியமான வேறு சாதனங்களை இறக்குமதி செய்தலும் விற்பனை செய்தலும்.

vii. கடற்றொழில் திணைக்களம் அல்லது அரசாங்கத்தின் வேறேதேனும் திணைக்களத்தின் சார்பாக மீன்பிடிக் கைத்தொழிலின் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

viii. மீன்பிடிக் கைத்தொழிலுக்கான படகுகளையும் வேறு சிறிய கலங்களையும் கட்டுதல்.

ix. மீன்பிடிப் படகுகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தலுக்கான வசதிகளை வழங்குதல்.

x. மீன்பிடிக்கு அவசியமான உபகரணங்களை உற்பத்திசெய்தலும் விற்பனை செய்தலும்.

எமது நோக்கங்களில் சில தற்போது இல்லாதொழிந்துள்ளதென்பதைக் குறிப்பிட வேண்டும். எனினும் மேலே குறிப்பிட்ட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட wxl (v) ஆம் இலக்கமுடைய நோக்கம் 2011.06.30 ஆந் திகதியும் 1712/21 இலக்கமும்கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலமாக திருத்தியமைக்கப்பட்டு கீழே குறிப்பிட்ட நோக்கங்களை பிரதியீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

i. சுயவளங்கள் வலயம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பிரமாணங்களுக்கு அமைவாக அதற்கு வெளியில் மீன்பிடிக்கின்ற தொழிற்பாடுகளில் ஈடுபடுதல் .
ii. மீன் பதப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.
iii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் மீன்விற்பனையில் ஈடுபடுதல்.
iv. அவசியமென உணர்கின்ற சந்தர்ப்பங்களில் மீன்களையும் மீன் உற்பத்திகளையும் இறக்குமதிசெய்தலும் ஏற்றுமதிசெய்தலும்.
v. மேலே குறிப்பிட்ட அலுவல்களில் ஏதேனுமொன்றை மேற்கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பங்காண்மைத் தொழில்முயற்சி உடன்படிக்கைகளில் பிரவேசித்தல்.
vi. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர் மற்றும் விநியோகத்தர்களை பிரதிநிதித்துவம் செய்தல்.

மேற்படி திருத்தப்பட்ட 06 நோக்கங்களில் நிகழ்காலத்தில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 04 முதனிலை தொழில்முயற்சி செயற்பாடுகள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. கூட்டுத்தாபன விற்பனை நிலையங்கள் ஊடான மீன் விற்பனை.
2. பொதிசெய்யப்பட்ட மிகைக்குளிரூட்டிய மீன் விற்பனை.
3. தீவடங்கிலும் வியாபார வசதிகளை விரிவாக்கி மீன் விற்பனையை விருத்திசெய்தல்.
4. பனிக்கட்டி வழங்கல் குளிரூட்டிய களஞ்சிய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

கூட்டிணைப்புத் தகவல்கள்

கூட்டுத்தாபனத்தின் பெயர்	-	இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
சட்டரீதியான தன்மை	-	அரச கூட்டுத்தாபனம்
கூட்டிணைத்த திகதி	-	1957 இன் 49 அம் இலக்கமுடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் 1964 ஒற்றோபர் 01 ஆந் திகதி

பணிப்பாளர்கள் -

திரு. பீ. கே. ஜகத் குமார பெரேரா	-	தலைவர்
திரு. பி.ஏ. சிறிநிமல் பெரேரா	-	முகாமைத்துவ பணிப்பாளர்
திரு. எச்.ஜீ. சுமனசிங்க	-	பணிப்பாளர் - பொது திறைசேரிப் பிரதிநிதி
திரு. பி. அஷோக விஜேரத்ன	-	பணிப்பாளர்
திரு. என்.பி.கே. ரணவீர	-	பணிப்பாளர்
திரு. சுனில் எதிரிசூரிய	-	பணிப்பாளர்

சிரேட்ட முகாமைத்துவம்

திரு. நிலான் கிறிஷாந்த மிரென்டா - பொதுமுகாமையாளர்

திரு. தஹம்கித் புஸ்ஸெல்ல - பிரதிப் பொதுமுகாமையாளர் - (நிதி)

திரு. துமிந்த றுவன் முணசிங்க - பிரதிப் பொதுமுகாமையாளர் - (சந்தைப்படுத்தல்)

திரு. யூ. ஜனக பாலிந்த சேனாரத்ன - பிரதிப் பொதுமுகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்)

திரு. டீ.சீ. கருணாதிலக - உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்

திருமதி. கே.வீ.எச்.பண்டாரநாயக்க - சட்ட உத்தியோகத்தர்/ பணிப்பாளர்சபை செயலாளர்

பதிவுசெய்த அலுவலகம் - இலக்கம் 15, றொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15.

கணக்காய்வாளர்கள் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள் - இலங்கை வங்கி

மக்கள் வங்கி

நோக்கு

மீன் உற்பத்தியாளரினதும் பாவனையாளரினதும் நலன்கருதி மீன்பிடி உற்பத்திகளையும் சந்தைப்படுத்தலையும் மேம்படுத்துகின்ற மற்றும் வழிகாட்டுகின்ற முதன்மை வணிக நிறுவனமாக அமைதல்.

அரும்பணி

- பயனுறுதிமிக்க அமைப்பென்றவகையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உச்ச அளவிலான பங்களிப்பினை நல்குதல்.

- மீன் உற்பத்தி, பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக பொறுப்புணர்வும் கரிசனையும்கொண்ட அர்த்தமுள்ள நிறுவனமாக அமைதல்.

- மீன்பிடித் தொழிலாளரின் பொருளாதார இயலுமையை பலப்படுத்துதலும் அதன் உற்பத்திக் கொள்திறனை மேம்படுத்துவதன் மூலமாக உயர்மட்ட அபிவிருத்தியை பெற்றுக்கொள்ளலும்.

- நவீன தொழில்நுட்பத்தைப் பிரயோகித்து நியாயமான விலையில் தரமிக்க மீனையும் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளின் உற்பத்தி செயற்பாடுகளிலும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

- பாவனையாளர்களின் புரதச்சத்து அவசியப்பாட்டுக்கான அதிக பங்களிப்பினை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

கௌரவ கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சருக்கு கையளிக்கப்பட்ட கடிதம்

றொக் ஹவுஸ் ஒழுங்கை,

முகத்துவாரம், கொழும்பு 15.

2023.08.08

கௌரவ டக்ளஸ் தேவாந்தா அவர்கள்

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சு,

புதிய செயலகம், மாளிகாவத்தை.

கொழும்பு -10.

கௌரவ அமைச்சரவர்களே,

1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச் சட்டத்தின் 14 (2) (ஈ) பிரிவினதும் 1957 இன் 49 ஆம் இலக்கமுடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 30(1) பிரிவினதும் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

1. பணிப்பாளர் சபை அறிக்கை
2. 2017 திசெம்பர் 31 ஆந் தேதியில் உள்ளவாறான நிதிநிலைமை பற்றிய கூற்றும் காசுப் பாய்வுக் கூற்றும்.
3. 2017 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று.
4. 2017 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.
5. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட பதில்கள்.

இந்த அறிக்கையை கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

நம்பிக்கையுள்ள,



ஒப்பம் /டீ.வீ. உபுல்

தலைவர்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

தலைவரின் மீளாய்வு

இலங்கை அரசாங்கத்தின் முழுமையான மேற்பார்வையையும் வழிகாட்டலையும் பெறுகின்ற முதன்மையானதும் ஒரேயோர் அரச நிறுவனமாகவும் அமைவது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனமாகும். மீனவர் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பங்களிப்பினை வழங்கி, பாவனையாளர்களுக்கு நியாயமான விலையில் மீன் வழங்குவதற்கான சூழலை நிர்மாணித்தல் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முதன்மைக் குறிக்கோளாகும். சமூகத்தின் ஒவ்வோர் மக்கட் குழுவிற்கும் தமது வருமான மட்டத்திற்கிணங்க மீனை கொள்வனவு செய்வதற்கான வசதிகளை வழங்குதல், மக்களின் புரதச்சத்து அவசியப்பாட்டினை நிவர்த்தி செய்வதன் மூலமாக வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் மற்றும் ஆரோக்கியமிக்க குடும்பத்தை உருவாக்குவதற்காக மீன் சந்தைப்படுத்தல் மூலமாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சந்தைப் பங்கினை அதிகரித்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மீன் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனமென்றவகையில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடம் தனித்துவமான செயற்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீன் சந்தைப்படுத்தலானது திறந்த சந்தை போட்டித்தன்மையின்பேரில் தீர்மானிக்கப்படுவதால் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவ உபாய மார்க்கங்களான விலைக்கொள்கை, பண்டப் (மீன் வகைகள்) பிரிவுகள், சந்தை பன்வகைமைப்படுத்துதல், சந்தைப்படுத்தல் மேம்பாடு போன்ற முகாமைத்துவ உபாயமார்க்கங்கள் போட்டித்தன்மைமிக்க சந்தையை வென்றெடுப்பதற்காக வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டுள்ளது.

1 மீன்கொள்வனவும் சந்தைப்படுத்தலும்

மீனவ சமுதாயத்தின் மீன் அறுவடையை நேரடியாகவே கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவுசெய்ய முடியுமாயின் அவர்களுக்கு மிகச்சிறந்த விலையைப் பெற்றுக்கொடுக்ககூடிய இயலுமை நிலவுகின்றது. அத்துடன் அதனூடாக பாவனையாளர்களுக்கு தரத்தில் உயர்வான மீனை குறைந்த விலைக்கு வழங்கமுடியும். இது கூட்டுத்தாபனத்தின் முன்னேறத்தில் நேரடியான தாக்கமேற்படுத்துவதாக அமையும். யாழ்ப்பாணம், பேசாலை, பருத்தித்துறை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் இருந்து மீன் அறுவடையைக் கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டத்தை விரிவாக்கல் மற்றும் அந்த பிரதேசங்களில் வசிக்கின்ற மீனவர் சமுதாயங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக மீன்பிடிக் கிராமங்களுக்குச்சென்று மீனவர் சமுதாயத்தைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வெற்றிகரமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ஆண்டுக்குள் புதிய கொள்வனவு நிலையங்கள் தாபித்து கூட்டுத்தாபனத்தின் மீன்கொள்வனவு அளவினை அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2017 ஆம் ஆண்டில் **3,445** மெட்றிக் தொன் மீனை கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் 3,907 மெட்றிக் தொன் மீனை தனது விற்பனை நிலைய வலையமைப்பு, நடமாடும் விற்பனை நிலைய கருத்திட்டம், லங்கா சதொச மற்றும் கோப்சிட்டி விற்பனை நிலையங்கள் மற்றும் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மீன்களை வழங்கியதன் ஊடாக சந்தைப்படுத்துவதற்கான இயலுமை கிடைத்தது.

2. <u>பனிக்கட்டி தயாரிப்பும் சந்தைப்படுத்தலும்</u>

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மற்றுமொரு வருமானப் பிறப்பாக்கப் பிரிவு என்றவகையில் பனிக்கட்டித் தயாரிப்பும் சந்தைப்படுத்துதலும் அநுராதபுரம், காலி, அம்பாந்தோட்டை மற்றும் மிரிஸ்ஸ பனிக்கட்டிப் பொறியகங்களின் தயாரிப்பு ஊடாக 9,843 மெட்றிக்தொன் விற்பனையை நெருங்க இயலுமாயிற்று.

3’ <u>மீன்களை தகரத்திலடைக்கின்ற கருத்திட்டம்</u>

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் நீண்டகால வாடகை அடிப்படையில் காலி கடற்றொழில் கூட்டுத்தாபன வளவில் ஹெப்பீகுக் லங்கா தனியார் கம்பெனிக்கு மீன்களை தகரத்திலடைக்கின்ற தொழிற்சாலைக்காக வழங்கப்பட்டுள்ளது.

சேவைகள்

4’ குளிரூட்டல் வசதிகளையும் பதப்படுத்தல் வசதிகளையும் வழங்குதல்

முகத்துவாரத்தில் அமைந்துள்ள குளிருட்டல் நிலையத் தொகுதியானது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன சந்தைப்படுத்தல் வலையமைப்பின் பிரதான உபபிரிவாகும். இங்கு களஞ்சியப்படுத்தல், மிகைக்குளிரூட்டல் மற்றும் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வெளிவாரி மற்றும் பிராந்தியத் துறைகளுக்கு பதப்படுத்தல் வசதிகள் வழங்கப்படுகின்றன. இந்த உயர்மட்ட கையிருப்புகளை பேணிவருவதன் ஊடாக பாவனையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவையை வழங்கக்கூடியதாக உள்ளது.

5’ சுற்றுலா பங்களா வசதிகள்

நுவரெலியா, கலமெட்டிய, சிங்கபுர மற்றும் மின்னேரியா ஆகிய நகரங்களில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நவீன வசதிகளைக்கொண்ட சுற்றுலா பங்களாக்கள் மூலமாக கண்கவர்தலும் அனுபவம்வாய்ந்த பணியாளர்களின் சேவையை பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6’ <u>இலாபநட்டம்</u>

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து 2.21 மில்லியன் ரூபா தேறிய இலாபம் பதிவாகி உள்ளது. கடந்த வருடத்தின் இலாபம் 247.81 மில்லியன் ரூபாவாகும்.



ஒப்பம் /டீ.வீ. உபுல்
தலைவர்
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

பணிப்பாளர் சபையின் அறிக்கை

- 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை அந்த காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை மிக்க மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது.

- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் 1957 இன் 49 ஆம் இலக்கமுடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் 1964 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையின்கீழ் இயங்கிவருவதோடு கூட்டுத்தாபனத்தினால் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை பின்வருமாறு பொழிப்பாக கூறலாம்.

- உள்நாட்டுரீதியாகவும் மீன்களை கொள்வனவுசெய்தல்.
- மொத்த மற்றும் சில்லறை அடிப்படையில் மீன் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளல்.
- பனிக்கட்டித் தயாரித்தலும் சந்தைப்படுத்தலும்.
- குளிரூட்டல்நிலைய வசதிகளை வழங்குதல்.

தொழில்முயற்சி நடவடிக்கைகளின் மீளாய்வு

- கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரமான தகவல்கள் உள்ளடங்கிய தலைவரின் மீளாய்வு இந்த பணிப்பாளர் சபை அறிக்கையின் முக்கியமான பகுதியாக கருதப்படல் வேண்டும்.

நிதிசார் கட்டமைப்பு

- கடந்த சில வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானம் இரண்டு பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமானத்தைக் கொண்டதாக இருப்பினும் 2016 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 2017 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு வருமானம் 608.3 மில்லியன் ரூபாவாகவும் தொழிற்பாடுகள் அல்லாத ஏனைய வருமானமும் 665.8 மில்லியனாலும் குறைவடைந்தமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக தலைமை அலுவலகத்தில் நிலவிய குளிரூட்டல் நிலையத் தொகுதியும் தயாரிப்பு அலகும் செயலிழந்தமையும் மீளாய்வாண்டுக்கு முந்திய ஆண்டின் மீன் தட்டுப்பாடும் இதில் தாக்கமேற்படுத்தியது.

- ஒட்டுமொத்த தேறிய இலாபநட்டத்தை கருத்திற்கொண்டால் 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகள் முறையே 54.45, 119.19, 259.9, 247 மில்லியன் ரூபாவாலும் மீளாய்வாண்டில் (2017) 2.2 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை வெளிக்காட்டுகின்றது.

<u>**ஒட்டுமொத்த வருமானம் மற்றும் இலாப/நட்ட விபரம்**</u>

	ஒட்டுமொத்த வருமானம் மில். ரூ.	மொத்த இலாபம் மில். ரூ.	தேறிய இலாபம்/நட்டம் மில். ரூ.
2011	1977	605.17	-68.97
2012	2079	701.19	-41.76
2013	1940	657.36	-54.45
2014	1855	563.26	-119.18
2015	1783	428.97	-259.90
2016	2736	445.13	247.80
2017	2127	503.16	2

ஒட்டுமொத்த வருமானம் மற்றும் இலாப/நட்ட விபரம்



ஒட்டுமொத்த வருமானம் மில். ரூ. **மொத்த இலாபம் மில். ரூ.** **தேறிய இலாபம்/நட்டம் மில். ரூ.**

❖ **பணியாட்டொகுதி**

➢ நிறைவேற்று உத்தியோகத்தர்கள்	-	42
➢ எழுதுனர்களும் இணையான தரங்களும்	-	211
➢ தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	-	138
➢ கனிட்ட ஊழியர்கள்	-	321
		712

❖ **ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

➢ மீண்டும் சேவையில் அமர்த்தியோர் எண்ணிக்கை	-	04
➢ தொழில் இடைநிறுத்துதல்	-	06

❖ **நிறைவேற்றுத் தரங்களுக்கான ஆட்சேர்ப்பு**

➢ பிரதிப் பொதுமுகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)	-	01
➢ பிரதிப் பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்)	-	01
➢ பொறிமுறை எந்திரவியலாளர்	-	01
➢ தொழில்நுட்ப உத்தியோகத்தர்	-	01

நிறைவேற்றுப் பதவியிலிருந்து பதவிவிலகல்

➢ கிடையாது

❖ **உடன்படிக்கைளிலான பணிப்பாளர்களின் ஈடுபாடு**

➢ இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய எந்தவோர் உடன்படிக்கை சம்பந்தமாகவும் பணிப்பாளர்களின் எவ்விதமான ஈடுபாடும் கிடையாது.

நன்றி நவிலல்

- கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்காக கௌரவ கடற்றொழில், நீரகவளங்கள் அபிவிருத்தி அமைச்சர் வழங்கிய பெறுமதிமிக்க அறிவுறுத்தல்கள், ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. கடற்றொழில், நீரகவளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களாலும் வழங்கப்பட்ட பெறுமதிமிக்க பங்களிப்பிற்காக பணிப்பாளர்சபை மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. இவ்வருடத்தில் எமக்கு அளித்த ஒத்துழைப்பு தொடர்பில் நிதி அமைச்சினதும் பொது திறைசேரியினதும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றி உரித்தாகின்றது.

- ஒட்டுமொத்த ஊழியர்குழாம் எமது சொத்தாக அமைவதோடு ஆண்டில் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்காக ஒட்டுமொத்த பணியாட்டொகுதிக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- எமது பெறுமதிமிக்க பாவனையாளர்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் பணிப்பாளர் சபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இலங்கை வங்கியாலும் மக்கள் வங்கியாலும் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் எம்மீது காட்டிய நம்பிக்கை தொடர்பில் இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனது இல: எஃப்எல்எஸ்/ஏ/சீஎஃப்சீ/1/எஃப்ஏ/2021/11 திகதி: 2022 ஒற்றோபர் 10

தலைவர்,

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

....

மேற்படி அறிக்கையை இத்துடன் அனுப்பிவைத்துள்ளேன்.

ஒப்பம்/ டபிள்யு. பி. சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :- 1. செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

2. செயலாளர் - நிதி அமைச்சு

எனது இல: எஃப்எல்எஸ்/ஏ/சீஎஃப்சீ/1/எஃப்ஏ/2021/11   திகதி: 2022 ஒற்றோபர் 10

தலைவர்,

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

....

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமான மற்றும் செலவுக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்வுக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13 (1) பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்கமுடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சோசலிஸ சனநாயகக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையில் அடங்கிய ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

<u>1.2 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தின் பொறுப்பு</u>

இந்த நிதிக்கூற்றுகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல், நியாயமானவகையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறள்கூற்றுகள் அற்றவையாக நிதிக் கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உன்னதமான கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI – 1000-1810) இலங்கை கணக்காய்வுத் தரநியமங்குளக்கு அமைவாக பேணிவரப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்தை அடிப்படையாகக்கொண்டு இந்த நிதிசார் கூற்றுகள் பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவேண்டியது எனது பொறுப்பாகும்.

1.4 அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் பெறுபேறாக நிதி நிலைமைக் கூற்றில், விரிவான வருமானம் மற்றும் செலவுக் கூற்றின் மற்றும் உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றின் அத்துடன் காசுப் பாய்வுக் கூற்றில் பதிவாகிய அல்லது பதிவாகாத விடயங்கள் மற்றும் அடிப்படை அம்சங்கள் ஏதேனும் சீராக்கல்களை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருந்ததாவென என்னால் தீர்மானிக்க முடியாது.

2. நிதிசார் கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயத்தை மறுத்தல்

இந்த அறிக்கையில் 2.2 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதியளவிலானதும் உசிதமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று. அதன் காரணமாக இந்த நிதிசார் கூற்றுகள் பற்றி நான் அபிப்பிராயமொன்றை வெளியிட மாட்டேன்.

2.2 நிதிசார் கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 39 வது பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் மீள்கணிப்பீட்டின்போது மீள்கணிப்பீட்டு மிகைநிலை தோன்றினால் அந்த மிகைநிலை சம்பந்தப்பட்ட காலப்பகுதியின் விரிவான வருமானத்திற்கும் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கும் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் 2014 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மீள்கணிப்பீட்டில் இருந்து ரூ. 45,328,629 2017ஆம் ஆண்டின் வருமானத்திற்கு மாற்றியதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அந்த அளவினால் அதிகமாகவும் மீள்கணிப்பட்டு ஒதுக்கம் அந்த அளவினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டுக்காக கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுகளில் இலாபத்தன்மையொன்று காட்டப்படுவது அவதானிக்கப்பட்டது.

ஆ) ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புகள் பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 86 ஆம் இலக்க பந்திக்கிணங்க வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவேண்டிய போதிலும் ரூ. 7,762,902 பெறுமதியான எதிர்பாராத பொறுப்புக்களுக்கான ஏற்புடைய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழ்க்காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) திறைசேரியால் 2014 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட ரூ. 237,169,566 பெறுமதியான பிணை முறிகள் மூலதன உருப்படியாகக் கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை மூலதன இலதாக்கல் என்றவகையில் பதிவழிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டுடன் தொடர்புடையதாக ரூ. 47,433,913 பதிவழிக்கப்பட்டிருந்ததோடு இதன் காரணமாக நிறுவனத்தின் இலாபம் மேற்படி அளவினால் அதிகரித்திருந்தது.

ஆ) மீளாய்வாண்டில் வர்த்தக கடன்படுனர்களுக்காக அறவிடமுடியாக்கடன் மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை என்பதோடு கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கையின்கீழும் முறைப்படி அதுபற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்க்காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2016 ஆம் ஆண்டில் கிடைத்த ரூ. 865,733,754 அரசாங்க கொடையில் முறையே நீண்டகாலக் கடனை விடுவிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூ. 225,613,104 மற்றும் 2015 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினங்களை தீர்ப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூ. 130,154,441 உம் மீன் வழங்கலாளர்களுக்கு செலுத்துவதற்காக செலவிட்ட ரூ. 19,867,583 என்றவகையில் மொத்தப் பெறுமதி ரூ. 375,635,128 2016 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டில் முந்திய வருட சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமை காரணமாக திரண்ட நட்டம் ரூ. 375,635,128 ஆல் குறைவடைந்திருந்தது.

ஆ) மீளாய்வாண்டில் அகற்றப்பட்டிருந்த ரூ. 600,000 பெறுமதியான 227 – 6264 இலக்கமுடைய அரசாங்கத்தின் பெறுமதி நிதிசார் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை என்பதோடு அதன் காரணமாக நடைமுறையல்லா சொத்துக்கள் அந்த மீதியால் அதிகமாகவும் திரண்ட தேய்மானம் ரூ. 360,000 அதிகமாகவும் மீளாய்வாண்டின் இலாபம் அதே அளவினால் குறைவாகவும் நிதிசார் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

இ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றதிகாரிகளால் மீன் விற்பனை செய்வதற்காக வாடகை அடிப்படையில் பெறப்படுகின்ற விற்பனைக் கூடங்களை மீன்களை

சந்தைப்படுத்த பொருத்தமான வகையில் அமைத்துக்கொள்வதற்காக உறப்படுகின்ற செலவுகளை பகுதிகளாகப் பிரித்து பல வருடங்களில் செலவுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் உறப்பட்டிருந்த ரூ. 13,933,437 ஆக அமைந்த செலவில் ரூ. 8,998,617 உம் முந்திய வருடத்துடன் தொடர்புடையதாக ரூ. 8,309,094 உம் செலவில் சீராக்கப்பட்டிருந்தபோதிலும் சம்பந்தப்பட்ட வாடகை உடன்படிக்கை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிராமையால் வாடகைக் காலத்துடன் தொடர்புடையதாக செலவு சரிவர சீராக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்துகொள்ள இயலாமல் போயிற்று.

ஈ) மீளாய்வாண்டின் மூலதன கொடைகளுடன் தொடர்புடைய சொத்துக்களின் ஆயுட்காலத்தை அடிப்படையாகக்கொண்டு இலதாக்கலை கணிப்பதற்குப் பதிலாக அந்த மூலதனம் பிரதான பேரேட்டு மீதிகள் மற்றும் அட்டவணை மீதிகளுக்கிடையிலான வித்தியாசத்தின் அடிப்படையில் இலதாக்கல் கணிப்பிடப்பட்டுள்ளமையால் ரூ. 28,553,054 ஆல் இலதாக்கல் வருமானம் குறைவாக கணக்குப்பதியப்பட்டிருந்தது.

உ) டூனா கருத்திட்டத்தின் நட்டத்தை ஈடுசெய்வதற்காக முந்திய வருடங்களில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த ரூ. 5,510,615 மீளாய்வாண்டில் இலதாக்கல் வருமானத்திற்கு ஏற்பிசைவு செய்யப்பட்டமையால் அந்த அளவினால் இலதாக்கல் வருமானம் அதிகரித்திருந்தது.

ஊ) பிராந்தியங்களுக்கிடையிலான நடைமுறைக்கணக்கு இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூ. 21,557,777 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதோடு அந்த மீதி நிச்சயமற்ற கணக்கிற்கு மாற்றுவதை தவிர்ந்த கணக்காய்வு செய்யப்பட்ட திகதிவரை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

எ) வருமதியான மொத்த இடர்க்கடன் மீதி என்றவகையில் மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுகளில் ரூ. 4,662,849 காட்டப்பட்டபோதிலும் ஊழியர் இடர்க்கடன் பதிவேட்டின்படி மொத்த கடன் மீதி ரூ. 3,961,109 ஆக அமைந்திருந்தது. அதன்படிரூ. 701,740 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

2.2.4 காசுப் பாய்வுக் கூற்று

காசுப் பாய்வுக் கூற்றினை தயாரிக்கையில் கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அ) தொடக்க மீதியாக நிலவிய முந்திய வருடத்திற்கான சென்மதியான நிலுவை சேமலாப நிதி ரூ. 175,550,922 வரிக்கு முந்திய இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தபோதிலும் தொழிற்பாடுகள் வரிக்கு முந்திய இலாபத்திலிருந்து குறைத்திருந்தமையால் அந்த பெறுமதியிலிருந்து தொழிற்பாடுகள் காசுப்பாய்வு குறைக்கப்பட்டிருந்தது.

ஆ) மீளாய்வாண்டில் உண்மையாகவே செலுத்தப்பட்டிருந்த பணிக்கொடைத் தொகை ரூ. 6,662,215 ஆக அமைந்தபோதிலும் செலுத்தப்பட்ட பணிக்கொடைத் தொகையாக ரூ. 47, 520,955 தொழிற்பாடுகள் காசுப் பாய்வின்கீழ் காட்டப்பட்டிருந்தது.

இ) மீளாய்வாண்டில் ஆதனம், சாதனம் பொறித்தொகுதிக் கொள்வனவு ரூ. 18,226,001 ஆக அமைந்தபோதிலும் முதலீட்டுச் செயற்பாடுகளின்கீழ் ரூ. 16,483,851 என காட்டப்பட்டமையால் ரூ. 1,742,150 ஆல் முதலீட்டுச் செயற்பாடுகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

ஈ) மீளாய்வாண்டில் வாகனங்கள் மற்றும் சிதைந்த வாகன விற்பனை வருமானம் ரூ. 5,930,777 ஆக அமைந்தபோதிலும் காசுப் பாய்வுக் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகள் என்றவகையில் ரூ. 3,057,850 ஏற்பிசைவு செய்யப்பட்டிருந்தது. மேலும் வாகனங்கள் மற்றும் சிதைந்த வாகன விற்பனையிலான ரூ. 3,590,777 தேறிய இலாபம் காசுப்பாய்வுக் கூற்றில் வரிக்கு முந்திய இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

<u>2.2.5 கணக்காய்வுக்கான எழுத்திலான சான்றுகள் இன்மை</u>

அ) மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுகளில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்காக ரூ. 1,248,265,895 பெறுமதியுடனான 516 நாளேட்டுக் குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு மேற்படி நாளேட்டுக் குறிப்புகளுக்கு அவசியமான ஜர்னல் செலவுறுதிச்சீட்டுகள், உதவிக் கோப்புகள், அங்கீகாரங்கள் எதுவுமே கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை என்பதோடு சேத செலவுமீளளிப்பு என்ற வகையில் நிதிசார் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த ரூ. 143,403,352 பெறுமதிக்காகவும் சேத செலவுமீளளிப்புக் கணக்கினை உருவாக்கியவிதத்தில் சம்பந்தப்பட்ட நாளேட்டுக் குறிப்புகளும் தோற்றுவாய் கடிதங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ) பெறுமதி ரூ. 157,671,728 ஆக அமைந்த 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவிவருகின்ற கடன்கொடுனர் மீதிகளின் திட்பநுட்பத்தன்மையை உறுதிசெய்து கொள்வதற்கு அவசியமான கடன்கொடுனர் மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்கள், உடன்படிக்கைகள், இன்வொயிஸ் போன்ற தோற்றுவாய் கடிதங்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இ) 2014 ஆம் ஆண்டில் மீள்கணிப்பீடு மேற்கொள்ளப்படுகையில் ரூ. 3,725,000 பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட 4 கருவிகளின் (Fork Lift) பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுகளில் நிலையான சொத்துக்களின்கீழும் தேய்மானத்தின்கீழும் அந்த கருவிகள் சீராக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் போயிற்று.

ஈ) மீளாய்வாண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் பிராந்தியங்களுக்கிடையில் (regions) மீன்கொள்வனவு மற்றும் விற்பனைக்கிடையில் ரூ. 845,319 வித்தியாசம் அவதானிக்கப்பட்டபோதிலும் மேற்படி வித்தியாசத்திற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

கீழ்க்காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிதிசார் கூற்றுகளின்படி மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய வர்த்தக வருமதிகள் ரூ. 234,326,842 மத்தியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்படுனர்கள் ரூ. 13,912,440 உம் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்படுனர் ரூ. 67,401,315 உம் 3 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்படுனர்கள் ரூ. 11,865,552 உம், அரச வழங்கல் பிரிவின் வேறு கடன் என்றவகையில் காட்டப்பட்டிருந்த ரூ. 939,938 உம், வைத்தியசாலைகளுக்கான பதpலீட்டு வழங்கலுக்கான பணத்தொகையும் இற்றைவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த கடன்படுனர் மீதிக்காக மீதியை உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை என்பதோடு ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த மீதியை அறவிட்டுக்கொள்ளுதலும் நிச்சயமற்றதென்பது அவதானிக்கப்பட்டது.

ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுகளுக்கிணங்க நிலவிய வேறு வருமதியான ரூ. 63,382,714 கடன் மீதிகளுக்கிடையில் ரூ. 52,689,374 அல்லது நூற்றுக்கு 83 வீதம் 5 வருடங்களை விஞ்சியதாக இருந்ததோடு ரூ. 4,367,117 அல்லது நூற்றுக்கு 7 வீதம் 2 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளாக விளங்கின. இந்த மீதிகளுக்கான மீதியை உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை என்பதோடு ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த மீதியை அறவிட்டுக்கொள்ளுதலும் நிச்சயமற்றதென்பது அவதானிக்கப்பட்டது.

இ) 2017 திசெம்பர் 31 திகதியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு 2 வருடங்களையும் விஞ்சியிருந்த தேசத்தைக் கட்டியெழுப்புதல் (NBT) ரூ. 48,146,752 வரித்தொகை 2009 இன் 09 ஆம் இலக்கமுடைய தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி சட்டத்தின் பிரிவு 04 இன் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றியனுப்பப்பட்டிருக்கவில்லை.

ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் 02 வருடங்களை விஞ்சியிருந்த பொருளாதார சேவைகள் பங்களிப்பு (ESC) 2013 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றியனுப்பப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் அமைந்தொழுகாமை

கீழே குறிப்பிட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் அமைந்தொழுகாத சந்தரப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டதிட்ட கட்டளைகளுக்கான தொடர்பு	விபரம்
அ) நிதி ஒழுங்குவிதி 396 இன் பிரகாரம்	2017 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் கணக்கு இலக்கம் 3562 உடன் தொடர்புடையதாக செலுத்துதல்களுக்காக சமர்ப்பித்திராத 06 மாதங்களை விஞ்சிய பெறுமதி ரூ. 143,283 ஆக அமைந்த 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளுடன் தொடர்புடைய 04 காசோலைகள் சம்பந்தமாக ஒழுங்குவிதியின் பிரகாரம் செயலாற்றப்பட்டிருக்கவில்லை.
ஆ) 2013 செத்தெம்பர் 11 ஆந் திகதிய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2013 இன் 3.9 பந்தியின் பிரகாரம்	ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத்தொகை , ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புத்தொகை முறைப்படி உரியநேரத்தில் செலுத்தப்படுவதென்பதும் சம்பளம் செலுத்தப்படுவதற்கு இணையான முன்னுரிமையுடன் அதனோடு இணையானதாக சம்பந்தப்பட்ட மீதிகள் இடம்பெறுவதென்பதும் நிலுவை பங்களிப்புத்தொகைகள் வளர்ச்சியடைவதில்லை என்பதும் தொடர்பில் நிறுவனங்களின் தலைவர், பணிப்பாளர்சபை, பிரதம நிறைவேற்று உத்தியோகரத்தர்களும் , விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புக்கூற கடப்பாடு கொண்டுள்ளபோதிலும் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2016 மே மாதம்வரை ரூ. 170,216,102 பங்களிப்புத்தொகை நிலுவையாக காணப்பட்டது.
இ) 2009 இன் 09 ஆம் இலக்கமுடைய தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3(1) பிரிவின் பிரகாரம்	விற்பனையின் பேரில் கணிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியை தனிவேறாக கணக்குப் பதிந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றியனுப்ப வேண்டியிருப்பினும் ரூ. 2,127,438,604 ஆக அமைந்த மொத்த விற்பனை பெறுமதியை

	விற்பனையாகக் கருதி கணக்குப் பதிந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றியனுப்பிய ரூ. 21,584,274 ஆக அமைந்த தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி செலவாக சீராக்கப்பட்டிருந்தது.
ஈ) 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச் சட்டத்தின் பிரிவு 16 இன் படி	அரச கூட்டுத்தாபனங்களால் வங்கி மேலதிகப்பற்று வசதிகள் உச்ச எல்லைக்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு மீளாய்வாண்டில் தொழிற்படு மூலதன அவசியப்பாடுகளுக்காக 99 மில்லியன் ரூபாவரை மேலதிகப்பற்று வசதிகளை பெற்றுக்கொண்டு இதற்காக 10 மில்லியன் ரூபா வங்கி மேலதிகப் பற்று வட்டியாக செலவிடப்பட்டிருந்தபோதிலும் அதனோடு சம்பந்தப்பட்ட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
உ) 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடைத் தொகை செலுத்துதல் சட்டம்	பணிக்கொடை நிதியத்திற்காக உரித்துரிமை பெறுகின்ற எவரேனும் ஊழியர் விலகும்போது 30 நாட்களுக்குள் அவ்விதமாக உரித்துவம் பெறுகின்ற பணிக்கொடைத் தொகைகள் செலுத்தப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பணக்கொடைத் தொகைகள் உரியகாலப்பகுதிக்குள் செலுத்துதல் தாமதித்தமையால் ஊழியர்களுக்கு ரூ. 3,897,054 அபராதத் தொகையை செலுத்தவும் நேரிட்டது.
ஊ) 2002 இன் 14 ஆம் இலக்கமுடைய சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் பிரிவு 26 இன் பிரகாரம்	ஒவ்வொரு மாதத்தினதும் சேர் பெறுமதி வரித்தொகை அடுத்துறும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னராக செலுத்தவேண்டியபோதிலும் 02 வருடங்களுக்கு மேலாக காலம் கழிந்திருந்த ரூ. 15,813,272 வரித்தொகை அவ்விதமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றியனுப்பப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

அ) கூட்டுத்தாபனத்தில் தலைமை அலுவலகம் அமைந்துள்ள நிலப்பரப்பில் 117.7 பர்ச்சஸ் மற்றும் 30 பர்ச்சஸ் நிலப்பகுதி கம்பெனியொன்றுக்கு 2017 மார்ச்சு 28 ஆந் திகதி குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததோடு மேற்படி குத்தகைக்கு வழங்கிய வளவுக்கு மேலதிகமாக மேலும் 49.7 பர்ச்சஸ் அத்துமீறி இருப்பாட்சி செய்யப்பட்டிருந்தது. நிலுவை குத்தகை வாடகையை அறவிட்டுக் கொள்ளாமையும் குத்தகைக்குப வழங்கிய காணிக்கு புறம்பாக இருப்பாட்சி செய்கின்ற 49.7 பர்ச்சஸ்

அளவினை கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்திக் கொள்ளவும் இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ) குத்தகை கொள்வனவாளர் தரப்பினால் குத்தகைக்கு பெறப்பட்ட வளாகத்திற்கு மேலதிகமாக இருப்பாட்சி செய்யப்படுகின்ற மேற்படி 2016 /86 திட்டவரைபடத்தின் Lot –A பகுதியின் 29.7 பரச்சஸ் தொடர்பான அரசாங்க மதிப்பீட்டு அறிக்கையின்படி மாதாந்த குத்தகை வாடகை ரூ. 178,333 ஆக அமைவதோடு 2017 மார்ச்சு 28 ஆந் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரை ரூ. 8,024,985 குத்தகை வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

இ) கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்புத் தொகையை செலுத்துகையில் வாழ்க்கைச் செலவுப் படியையும் உள்ளடக்கி பங்களிப்புத் தொகையை கணிப்பிடாமையால் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2016 மே மாதம் வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கான நிலுவை பங்களிப்புத் தொகை மற்றும் மிகை விதிப்பாக ரூ. 170, 216,102 ஐ செலுத்தவேண்டி இருந்தது.

ஈ) கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) பங்களிப்புத் தொகையை செலுத்துகையில் வாழ்க்கைச் செலவுப் படியையும் உள்ளடக்கி பங்களிப்புத் தொகையை கணிப்பிடாமையால் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2016 மே மாதம் வரை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான நிலுவை பங்களிப்புத் தொகை ரூ. 15,420,275 மற்றும் மிகை விதிப்பாக ரூ. 7,710,137 ஐ செலுத்தவேண்டி இருந்தது.

உ) கொழும்பு தொழில் நியாயமன்றம் வழக்கு எண் 25302/05/20 இன்படி 2016 யூன் மாதத்தில் இருந்து பெப்புருவரி மாதம் வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்புத் தொகையாக ரூ. 39,130,742 மிகை விதிப்பாக ரூ. 19,565,370 ஐ செலுத்தவேண்டி இருந்தது.

ஊ) தன்னிச்சையான இழப்பீட்டுத் தொகைக்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த ரூ. 11,511, 870 திறைசேரி நிதி அந்த நோக்கத்திற்குப் புறம்பாக நிலுவைச் சம்பளம் செலுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

எ) ரூ. 5,000,000 இற்கு மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருந்த KA – 7699 இலக்கமுடைய ஜீப் வண்டி உணவு, விவசாய தாபனத்திற்கு சொந்தமானதாக அமைவதோடு 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி ஊர்தியை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் பாவனைக்கு எடுத்திருந்தபோதிலும் அதன் சொத்துவத்தைக் கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்திக்கொள்ள செயலாற்றப்பட்டிருக்கவில்லை.

ஏ) நிதிசார் கூற்றுகளின்படி மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய வர்த்தக மற்றும் பிற சென்மதிகளான ரூ. 216,854,806 மத்தியில் 02 வருடங்களுக்கு மேலாக கடன்கொடுனர் ரூ. 28,270,680 உம் 01 வருடத்திற்கு மேலான கடன்கொடுனர் ரூ. 2,310,992 உம் நிலவியதோடு ரூ. 39,835,900 இற்கு மத்தியில் ரூ. 2,692,486 தொகை 05 வருடங்களை விஞ்சியதாக நிலவியதோடு ரூ. 17,342.684 தொகை 2-5 வருடங்களுக்கிடையில் நிலவியபோதிலும் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

ஐ) நிதிசார் கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய கடன்கொடுனர் மீதி ரூ. 313,178,701 மத்தியில் ரூ. 188,300,735 அல்லது நூற்றுக்கு 60 வீதம் 05 வருடங்களுக்கு மேற்படி கடன்கொடுனர் மீதியாக அமைவதோடு ரூ. 60,191,966 அல்லது நூற்றுக்கு 19 வீதம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்கொடுனராக அமைந்ததோடு மேற்படி கடன்கொடுனர் மீதிகளை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம் / டபிள்யு.பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

……………………………………………………………………………………………………

2023.07.24

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

அரசாங்க கணக்காய்வு உப அலுவலகம்,

தேசிய நீரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகர சபை,

இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி,

பெலவத்த,

பத்தரமுல்ல.

ஐயா / அம்மணீ,

1971 இன் 38 அம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நிதிசர் கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

FLS/A/CFC/1/FA/2021/11 இலக்கமும் 2022.97.20 திகதியும் கொண்ட தங்களின் கடிதத்திற்கிணங்க கணக்காய்வு அறிக்கை பற்றிய எமது தெளிவுபடுத்தல்கள் மற்றும் அவதானிப்புகளுடனான விடைகளை உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

இப்படிக்கு
நம்பிக்கையுள்ள

தலைவர்
கடற்றொழில் கூட்டுத்தாபனம்.

எனது இல : CFC/FD/AUD/2022 உமது இல: FLS/A/CFC/2021/AQ/06 திகதி : 2022.08.10

டீ.எஸ். கலகம,

கணக்காய்வு அத்தியட்சகர்,

அரசாங்க கணக்காய்வு உப அலுவலகம்,

இலங்கை தேசிய நீரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,

இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி,

பெலவத்த,

பத்தரமுல்ல.

ஐயா/அம்மணீ

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) 2014 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் சொத்துக்கள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருடத்தில் இருந்து இந்த வருடம் வரை மேற்படி ஒதுக்கம் சம்பந்தமாக இந்த முறையியலுக்கு அமைவாகவே கணக்குப்பதியப்பட்டுள்ளதோடு இதற்காகவும் கணக்காய்வு ஐயவினா முன்வைக்கப்படவில்லை. இதன் ஏற்புடைய சீராக்கல்களை 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

(ஆ) வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பு இலக்கம் 22 இன் கீழும் கணக்கீட்டுக் கொள்கைகளிலும் இது பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) ஏற்புடைய கணக்கீட்டுக் கோளாறு பற்றி தெளிவுபடுத்திக் கொள்வது சிரமமானதென்பதால் எதிர்வரும் வருடங்களில் சம்பந்தப்பட்ட சீராக்கல்களை மேற்கொள்ள அவசியமான அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) உடன்படுகிறேன். எதிர்கால நிதிசார் கூற்றுகளுக்காக அவசியமான சீராக்கல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன்.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) இந்த கணக்குகள் தொடர்ச்சியாக நிலவிவருவதால் 2017 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் 05 வருடங்களுக்குள் வெட்டிவிடத் தீர்மானிக்கப்படுமென்பதோடு இங்கு கணக்கீட்டுக் கோளாறுகள் நிலவுமாயின் அவசியமான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொண்டு 2019 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கல்களை கணக்குகளில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

(ஆ) ரூ. 600,000,000 பெறுமதியான 227 – 6264 இலக்கமுடைய ஊர்தியின் பெறுமதி நிதிசார் கூற்றுக்களிலிருந்து நீக்கப்படவேண்டியதாக இருந்ததென்பதை ஏற்றுக்கொள்கிறேன். அவ்வாறு செய்யாமையால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதிகள் அதிகமாக திரண்ட தேய்மானம் செய்யப்பட்ட ரூ. 360,000.00 ஆல் அதிகமாக நிதிசார் கூற்றுகளில் காட்டப்பட்டிருத்தல் பற்றி உடன்படுகிறேன். 2019 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றுகள் தயாரிக்கப்படுகையில் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும்.

(இ) KA -7699 இலக்கமுடைய ஜீப் வண்டி உணவு, விவசாயத் தாபனத்திற்கு சொந்தமானதாக அமைவதோடு அது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு கடற்றொழில் அமைச்சு ஊடாக பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளதோடு அதன் சொத்துவம் கடற்றொழில் அமைச்சிற்கு கையளிக்கப்படவில்லை என்பதால் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கணக்குப் புதத்தகங்களில் உள்ளடக்கப்படவில்லை.

(க) மீளாய்வாண்டில் மூலதனக் கொடைகளுடன் தொடர்புடையதாக மேற்படி கொடைகளுடன் சம்பந்தப்பட்டதாக இனங்காணக்கூடிய சொத்துக்களின் ஆயுட்காலத்தை அடிப்படையாகக்கொண்டு இலதாக்கல் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முந்திய வருடங்களில் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த மூலதன கொடைகளுடன் தொடர்புடைய சொத்துக்களுக்கான இலதாக்கலைக் கணிப்பிட்டு கணக்குக் குறிப்பு சீராக்கல்களை மேற்கொண்டுள்ள பேரேட்டுக் மீதிகள் மற்றும் அதற்காக இருக்கின்ற அட்டவணை மீதிகளை பரீட்சித்துப் பார்க்கையில் வித்தியாசங்கள் நிலவுவதாக அவதானிக்கப்பட்டமையால் 2017 ஆம் ஆண்டில் மேற்படி வித்தியாசங்கள் உள்ள விதம்பற்றிய பதிவேடொன்றினை தயாரித்து அவ்விதமாகத் தோன்றிய வித்தியாசங்களின் மீதியை 2017 ஆம் ஆண்டிலிருந்து 05 வருடங்களுக்குள் பிரித்தொதுக்கி கணக்குகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 28,553,054.00 இல் இலதாக்கல் வருமானம் குறைவாக கணக்குப் பதியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு அந்த மீதி அமைந்துள்ள விதம்பற்றிய தகவலை வழங்கினால் அது பற்றிய விடயங்களை சமர்ப்பித்தலை மேற்கொள்ளலாம்.

(ங) உடன்படுகிறேன். அவசியமான அறிவுறுத்தல்களைப் பெற்று 2019 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றுகளில் ஏற்புடைய சரியான சீராக்கல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

(ச) 2016 இல் கிடைத்து சுயேட்சை இழப்பீட்டுக்கான திறைசேரி நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் சுயேட்சையான இழப்பீட்டுத் திட்டத்ததின்கீழ் இளைப்பாறச் செய்விக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு செலுத்துதல்களை மேற்கொண்டபின்னர் எஞ்சியுள்ள பணத்தை சுயேட்சையான இழப்பீட்டு அடிப்படையில் இளைப்பாறிய ஊழியர்களின் அனைத்துவிதமான நிலுவைச் சம்பளத்தைச் செலுத்தவும் சம்பளம் செலுத்தாதுள்ள பிராந்தியங்களுக்கான சம்பளம் செலுத்தவும் 1020 ஆம் இலக்கமுடைய பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2017 ஆம் ஆண்டில் அரச கொடை வருமானமாக ரூ. 20,582,127.00 காட்டப்பட்டுள்ளது. ரூ. 11,511,870.00 அரச கொடை வருமானம் மிகைமதிப்பீடாக அமையவில்லை என்பதையும் அறிவிக்கிறேன்.

(ட) பிராந்தியங்களுக்கிடையிலான நடைமுறைக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 2017.12.31 ஆந் திகதியில் ரூ. 21,557,771.00 வித்தியாசம் நிலவியமை அவதானிக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளபோதிலும் நிதிசார் கூற்றின்படி அது ரூ. 21,547,777.00 என்றே குறிப்புப் பதியப்பட்டுள்ளது. மேலும் உங்களால் இந்த நடைமுறைக் கணக்குகளுக்கிடையில் உள்ள வித்தியாசங்கள் 2017 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றுகளில் நிச்சயமற்ற கணக்கின் மீதியான ரூ. 34,886,249.00 இல் அடங்கியுள்ளதாக காட்டப்பட்டிருப்பினும் கணக்குகளில் அவ்விதமாக குறிப்புப் பதியப்படவில்லை என்பதை அறிவிக்கிறேன். மேலும் இந்த நடைமுறைக் கணக்கு மீதியும் நிச்சயமற்ற கணக்கு மீதிகளும் நிதிசார் கூற்றுகளில் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளன.

(ண)(த) நிறுவனத்தின் நிதிநிலைமை சாதகமானதாக அமையாமை காரணமாக இந்த செலுத்துதலை மேற்கொள்ள முடியாதுள்ளதோடு நிதிநிலைமை சாதகமான நிலையை அடைந்ததும் உடனடியாக இந்த செலுத்துதல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.4 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

(அ) கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள பழைய கடன்படுனர் மீதிகளில் 10 வருடங்கள், 05 வருடங்கள் மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்படுனர்களை அறவிட்டுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் அரச வழங்கல் பிரிவின்கீழ் பிற கடன்களாக காட்டப்பட்டிருந்த மீதியான ரூ. 939,938.00 பணத்தொகை இனங்காணப்பட்டுள்ளதோடு அது வைத்தியசாலைகளுக்கான பதிலீட்டு வழங்கலுக்காக கிடைத்திராத பணத்தொகையாகும்.

(ஆ) 2017.12.31 திகதியிலான நிதிசார் கூற்றுகளுக்கிணங்க நிலவிய பிற வருமதிகளான ரூ. 63,382,714.00 கடன் மீதியில் உள்ள 05 வருடங்களை விஞ்சியதாக கடன்மீதிகளாக காட்டப்பட்டுள்ள பெறுமதியில் கூடிய அளவுக்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்விதமாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சில நிறுவனங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

Colombo Marine Debtors - Rs. 3,800,000.00

R&R Export - Rs. 2,125,000.00

Batticaloa Ice Plant Debtor - Rs. 5,958,840.00

(இ) கணக்காய்வு ஐயவினா தொடர்பில் உடன்படுவதில்லை என்பதோடு, மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுகளில் முன்னர் மேற்கொண்ட செலுத்துதல் பதிவேட்டில் (Deposit & Pre payment) 05 வருடங்களுக்கு மேலாக காட்டப்பட்ட பெறுமானத்திற்குள் இருக்கின்ற ஊழியர் பிணை வைப்புகள் (NSB) என்றவகையில் காட்டப்பட்டுள்ள ரூ. 12,338,059.00 பெறுமானம் கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் வங்கி அலுவல்கள் சம்பந்தமாக கடமைப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மாதாந்த நிதிசார் பெறுமதியொன்றை சம்பளத்தில் இருந்து கழித்து அதனை அவர்களின் பெயரில் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்கின்ற பெறுமதியின் கூட்டுத்தொகைகளிலிருந்தே தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதில் stall deposit என காட்டப்பட்டுள்ளது கூட்டுத்தாபனத்தினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட விற்பனை நிலையங்களுக்காக வெளித்தரப்பினர்களுக்காக வைப்புச்செய்யப்பட்டுள்ள பெறுமதிகளாக அமைவதோடு இந்த விற்பனை நிலையங்கள் மூடி முடிக்கப்படும்வரை இந்த பணத்தை மீள்அறவீடு செய்தல் இடம்பெறாமை காரணமாக இந்த மீதி இடையறாமல் முன்கொண்டுசெல்லல் இடம்பெறுவதால் அந்த மீதிகளை மூன்றாந் தரப்பினர்களிடமிருந்து துரிதமாக அறவிட்டுக்கொள்வது சிரமமான விடயமாகும்.

(ஈ) உடன்படுகிறேன். அவசியமான சீராக்கல்களை எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

(உ) நிறுவனத்தில் நிலவுகின்ற நிதிசார் நெருக்கடி காரணமாக கடன்கொடுனர்களுக்கு செலுத்துதல்களை மேற்கொள்வதில் தாமதித்தமையால் இவ்விதமாக நீண்டகால கடன்கொடுனர் மீதி காட்டப்படுகின்றது. எதிர்காலத்தில் நிநிநிலைமை சாதகமானதாக அமைந்தால் அவசியமான செலுத்துதல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

